18th February 1961] [Sri M. Bhaktavatsalam]

சர்டிபிகேட் போதுமான சாட்சியம் அளிப்பதாக இல்லை. இருக்கக் கூடிய சாட்சியங்களை வைத்துக்கொண்டு ப்ராசிக்யூட் பண்ணு வதில் பயன் இல்லையென்று அவர் சொல்லிவிட்டார்.

Women workers

* 379 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken by the Government to prevent the retrenchment of women-workers from the textile mills in Coimbatore due to the introduction of cone winding in the mills; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The question of displacement of women-workers in textile mills in Coimbatore district due to the introduction of cone winding machines was discussed at a meeting of the State Labour Advisory Board (which is a tripartite one) held on 27th August 1960. The Board recommended that a conference of employers and trade unions might be convened during September to arrive at a solution of this problem and that in the meanwhile the mill owners in Coimbatore area might be advised to avoid retrenchment of women-workers. The Commissioner of Labour has accordingly requested the Chairman, Southern India Millowners' Association, to advise members (mills) to keep in abeyance any proposals for retrenchment of women labour pending consideration of the whole question by the Government. A conference of mill managements and trade unions was also convened by the Commissioner of Labour during October 1960, to explore the possibility of arriving at a solution of the problem. At the above conference, it was decided that a committee consisting of both the managements and labour should be formed to go into the implications and all aspects of the question in full and suggest ways and means to solve the problem.

The Government approved the above recommendations of the conference and authorized the Commissioner of Labour to take action accordingly. The report of the Commissioner of Labour on the action taken is awaited.

SRI N. K. PALANISAMI: ஸார், இந்தப் புதிய ஏற்பாட்டினுல் நாற்பது பேர் வேலை செய்த இடத்தில் பத்துப் பேர்களுக்குத்தான் வேலை இருக்கிறது. பாக்கியுள்ள 30 பேர்கள் வேலை இழக்கவேண்டியிருக்கிறது. முக்கூட்டுக் கமிட்டியிலும் சரி, தொழிலாளர்களோடு, முதலாளிகளோடு நடத்திய பேச்சு வார்த்தையிலும் ஆடமாடிக் ஆம்ஸ் கொண்டு வருவதனுல் ஏற்கனவே வேலையில் இருக்கிறவர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாத வகையில் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு விரோதமாக நடந்து கொண்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க குறிப்பாக கன்னை பிரான் மில்ஸில் கோயம்பத்தூரில் . . . . . .

MR. SPEAKER: The hon. Member should not mention the name of an individual mill. If he does it, I will not allow him to proceed further.

SRI N. K. PALANISAMI : இந்தமாதிரி மில்களில் வேலையை விட்டு ஆட்களை நீக்கக்கூடாது என்று தடைசெய்ய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் நீண்ட பதில் சொன்னதற்குக் காரணமே என்ன என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்காகத்தான். இரண்டு மகாநாடுகள் நடத்தப்பட்டிருக்கிறது. முதலாளிகளும், தொழிலாளர்களும் இதுபற்றி பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் இதுசம்பந்தமாக புதிதாக எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை. தனிப்பட்ட இடத்தில் ஏதாவது குறை ஏற்படுமானால் கன்சிலியேஷன் ஆபீசர், லேபர் கமிஷனர் மூலமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : தலைவர் அவர்களே, பெண்களை வேலைக்கு எடுத்துக்கொண்டு பின் தள்ளி விடுவதைப் பற்றிக் கேட்கிறார்கள். ஆனால் திருநெல்வேலியில் உள்ள கூட்டுறவு ஆலையில் பெண்களையே வேலைக்கு எடுத்துக்கொள்வதில்லை என்று சொல்கிறார்களே. இது நியாயம்தானா ? இந்தக் குறையை நிவர்த்திக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்போகிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் சர்க்கார் பொறுப்பு இல்லை. மில்லை நடத்துகிறவர்கள் யாரை வேலைக்கு வைத்துக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளலாம்.

SRI J. MATHA GOWDER : இதனால் எத்தனை பெண் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள் ? அவர்களுக்கு ஏதாவது சர்க்கார் மாற்று வேலை தேடித் தந்திருக்கிறதா ? அவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டு பண்ணிக் கொடுப்பதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதுவரையில் வேலை இழந்தவர்கள் என்று கிடைத்திருக்கும் புள்ளிவிவரம் மிகக் குறைவு. நூறு அல்லது இருநூறுக்கு மேல் இல்லை. அவர்களுக்கு ரீலிங்தான் தெரியும். பொதுவாக அதுவே வேண்டாம் என்கிற போது அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்பு இல்லை.

SRIMATHI A. S. PONNAMMAL : அமைச்சர் அவர்கள் பெண் தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று மில் முதலாளிகளை வற்புறுத்துவதற்கில்லை என்றார்கள். இதில் தனிப்பட்டவர்களுடைய இஷ்டத்திற்கு விடுவதற்குப் பதிலாக நூற்றுக்கு இத்தனை பேர் பெண் தொழிலாளர்கள் இருக்க வேண்டும் என்று திட்டமாக உத்தரவு போட முடியாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பெண்களே ஒரு தொழிலை ஆரம்பித்து அங்கே ஆண்களையே வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொன்னாலும்கூட சர்க்கார் தலையிடாது.

(சிரிப்பு). இது சட்டப் பிரச்சனை. ஆனால் பெண்களுக்கு வேலை தேடித் தரவேண்டும் என்பதற்காகத்தான் சர்க்கார் இதர வழிகளில் உதவி செய்து வருகிறது.

Sri V. K. KOTHANDARAMAN : ஆண் தொழிலாளர்களைவிட பெண் தொழிலாளர்களுக்கு மெடர்னிடி பெனிபிட் போன்ற பல அதிக சலுகைகள் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதனால்தான் பெண் தொழிலாளர்களை நீக்கிவிட்டு அங்கே ஆண் தொழிலாளர்களை நியமித்திருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இம்மாதிரி செய்யக்கூடாது. திரும்பவும் வேலைக்கு வைத்துக்கொள்வது என்றால் பெண் தொழிலாளர்களையே தான் வைத்துக்கொள்ளவேண்டுமென்று உத்தரவு பிறப்பிப்பார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருக்கு இது சம்பந்தமான விதிகள் எல்லாம் தெரியும் என்று நினைக்கிறேன். வேலையில் இருந்து நீக்கிவிட்டு உடனே வேறு தொழிலாளர்களை அங்கே நியமிக்க முடியாது. ரிட்ரெஞ்ச்மெண்ட் என்று ஆட்களை நீக்கிவிட்டு, வேறு ஆட்களை நியமிப்பது என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அம்மாதிரி வைக்கிறார்கள் என்று சொல்வது தவறு. விஷயம் தெரியாமல் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு டிபார்ட்மெண்டையே மூடுவதனால் அங்கு வேலை செய்து வந்த அத்தனை பேர்களுக்கும் வேலை போகிறது. அவ்வளவுதான்.

Sri S. PAKKIRISAMI PILLAI : ஆள் குறைப்புத் திட்டத்தில் 'Last come should go first' என்கிறபடி அங்கிருந்து பெண் தொழிலாளர்களை நீக்கிவிட்டால், அந்தப் பகுதியில் மீண்டும் புதிதாக வேலைக்கு ஆள் எடுக்கும்போது இவர்களுக்குத்தான் முதல் சலுகை கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதுதான் இப்போது இருக்கிற அரசாங்கத்தின் உத்தரவு. கனம் அங்கத்தினர் நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். ஒரு பகுதி முழுவதையும் எடுத்துவிடும்போது ரீலிங் பகுதியில் வேலை செய்கிறவர்களுக்கு வேலை போகிறது. இது சாதாரண ரிட்ரெஞ்ச்மெண்ட் போன்றது அல்ல. மற்றதற்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த வேலை செய்தவர்களுக்கு வேறு வேலையும் தெரியாது.

Sri N. K. PALANISAMI : முதலாளிகளும், சர்க்காரும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறபோது ஆட்களை வேலையைவிட்டு நீக்கக்கூடாது என்று உத்தரவு போடுவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் சர்க்கார் உத்தரவு போட முடியாது. சிபார்சு செய்திருக்கிறது.

[18th February 1961

MR. SPEAKER : *கேள்வி 380-ஐ 22-ந் தேதி எடுத்துக்கொள் கிறேன். அந்தக் கேள்வியை நோட்டீஸ் கொடுத்துள்ள கனம் அங்கத்தினர் ராமசாமி கல்கத்தாவில் இருப்பதனால் பின்னால் அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று எனக்குக் கடிதம் எழுதி யுள்ளார். நானும் அனுமதி அளித்திருக்கிறேன். ஆகவே, இப்போது கேள்வி 381-ஐ எடுத்துக்கொள்வோம்.*

Milk

* 381 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether Government are aware of the scarcity of fresh milk in the City; and

(*b*) if so, the steps taken to provide more milk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The answer [a] is placed on the table of the House.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that fresh milk has become a luxury in the City of Madras and that it is beyond the reach of the common man and if so, will the Government take steps to transport fresh milk from the neighbouring districts to the Madras City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am quite well aware that there is shortage of milk in the City and the Government have been taking every step, possible and practicable, to increase the supply of milk.

SRIMATHI T. N. ANANDANAYAKI : *நகரசபைப் பிரதேசத்தில் நல்ல பால் கிடைப்பதற்காக மாதவரத்தில் பால்பண்ணை ஆரம்பித்தார்களா? அதில் எத்தனை மாட்டுக்காரர்கள் சேர்ந்திருக் கிறார்கள்? அங்கே போய்ச் சேரக்கூடாது என்று எதிர்க்கட்சிக் காரர்கள் பிரசாரம் செய்து வருவது கனம் அமைச்சர் அவர் களுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *எத்தனைபேர் சேர்ந் திருக்கிறார்கள் என்பதற்கு சென்ற கூட்டத்தில் விவரம் கொடுத்தேன். இப்போது அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. அங்கே போய்ச் சேரக்கூடாது என்று எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்வதாக அரசாங்கத்திற்கு ஒன்றும் தகவல் இல்லை.*

Leprosy

* 382 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state the nature of assistance given to the Leprosy Teaching and Research Institute, Chingleput, by our State?

[a] Printed as Appendix III on pages 89–90 infra.